**MINUTES OF THE PUBLIC HEARING MEETING CONDUCTED FOR THE PROPOSED BLACK GRANITE QUARRY MINING PROJECT OVER AN EXTENT OF 166.92.0 HECTARES BY M/S. TAMILNADU MINERALS LIMITED AT S.F.NO.917(P) & 921(P), MAHIMANDALAM VILLAGE, KATPADI TALUK, VELLORE DISTRICT ON 31.01.2024 AT 11.00 A.M IN GOVERNMENT HEALTH SUB-CENTRE GROUND (NEAR BUS STOP) MAHIMANDALAM VILLAGE.**

**Present:**

1. Thirumathi. D.Malathi : District Revenue Officer, Vellore District.

2. Thiru G. Ravichandran :District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Vellore

And project proponent and public of 64 numbers (Attendance records is attached)

**Introduction:**

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Vellore welcomed the District Revenue Officer, Vellore, Government officials, Media, Polices and the general Public who were present in the public hearing meeting for the proposed Black Granite Quarry Mining Project at S.F.No.917(P) & 921 (P), Katpadi Taluk, Vellore District by the M/s. Tamilnadu Minerals Limited and he also explained about the Environmental Impact Assessment Notifications, 14.09.2006 issued by Ministry of Environment, Forest and Climate Change, Government of India and the need for conducting Public Hearing for the proposed project.

He further explained that as the proposed project of mining activity is falls under the activities listed under the Schedule of the Environmental Impact Assessment Notifications, 2006 and it is necessary to conduct public hearing for the proposed project.

He further informed that public notice for the conduct of public hearing for the project was published in the dailies of "Dhinathandhi" and "Indian Express" on 24.12.2023. Based on that public hearing meeting is currently being held under the chairmanship of the Hon'ble District Revenue Officer.

He further informed that the project proponent will explain about their proposed project and environmental impact study and mitigation measures to be carried out through a power point presentation. After the presentation, the public can express their views, suggestions and comments regarding the project by

informing their name, father's name and place so that all these are video graphed and send to Authority for necessary action.

He also informed that the whole process of public hearing including the views, suggestions and comments given by the public will be recorded through videography and the same will be sent to the State Environmental Impact Assessment Authority for taking necessary action.

The District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Vellore requested The District Revenue Officer, Vellore District to inaugurate the public hearing.

**District Revenue Officer, Vellore District:**

The District Revenue Officer, Vellore has informed that the meeting has been held here on behalf of M/s. Tamil Nadu Mineral Limited. Further she explained that the public hearing meeting should be conducted to obtain Environmental Clearance. In this regard you have already been advertised through loud speakers and newspapers. Further the general public can ask if they have any objections or doubts after the Project proponent's representative explained about their proposed project details. Therefore, we request you to provide your commentary regarding this project. Also, project proponent will explain the process of this project.

**Representative of Project proponent, Dr.E.Ganesan**

The representative of Project proponent, Thiru E.Ganesan, gave the detail presentation regarding the activities of M/s. Tamilnadu Minerals Limited and the proposed mining activities in S.F.No.917(P) & 921 (P), Katpadi Taluk, Vellore District with the details of surveys carried out with respect to air quality, surface and ground water quality, noise survey in the proposed project area and its surroundings. He also explained about the expected impacts in Environments with the remedial measures proposed for the same. Further he explained about the requirement of water and power for the project. He also gave an explanation about the cost of operation and the old method implemented in the quarry and the new method of quarrying granite stones. Then, he informed that the benefit of the project is bringing foreign exchange to the government.

Finally, he requested the public to ask questions or offer their views and suggestions.

District Revenue Officer, Vellore requested the public to offer their views, objections, suggestions if any for recording.

Subsequently, people expressed their views orally one by one as follows –

**District Environmental Engineer, Vellore District**

Now the public can express their opinions, ideas, explanations and questions one by one. I ask one person to ask the corresponding answer and after the factory management gives an explanation, the next person asks the questions.

**Thiru. Loganathan, Mahimandalam Village:**

My regards to the District Revenue officer and the Health Department officials. And they have given all the modern explanations about this Project. Before this our wells were collapsing from shock due to quarrying activity. Now that the project is being implemented in a modern way, I have nothing to say about it. There would be pollution again. A lot of pollution in the construction of this road is causing harm to the people. For that I humbly request you to set up a (PHC) Public Health Centre and a Veterinary Hospital to this village. Apart from that, we request you to arrange Employment to the local youths, so that these people can benefit from it. And there are plenty of dogs and monkeys in our town. They leave lots of waste in our village, which is also polluting our village. I humbly request that this be taken seriously

**District Revenue Officer:**

Give a separate letter in this regard and taking it to the attention of the forest department and necessary action will be taken. Also informed TAMIN administration to provide employment to locally educated youth.

**M. Kesavan, Melpodinantham village.**

Near to quarry S.F. No: 917 there are two villages namely Bodinantham and Melbodinantham. At the beginning sir, as said the houses are in the condition of cracking and collapsing due to blasting. Now they are implementing the advanced modern technology in this project. I don't blame it. However, they load more blocks on the truck and making over load. Now the road from Quarry Road to Ponnai Road is in damaged condition. They may load with in the limit. The road gets polluted by carrying that much weight.

Second, the lake has been half filled due to soil erosion from the quarry. Our adjacent land was flooded due to this erosion. The former Divisional Manager Mr.Kannadasan, assured to construct a check dam at the quarry and made plan also. For some reason they put it on hold. Check Dam was not constructed till date.

Most of our village youths are working in Military. We met the TAMIN Managing Director in Head Office, Chennai along with 100 to 200 youngsters and

requested to give employment opportunity in Mahimandalam quarry. They are only denying by saying said by today and tomorrow but did not give Employment. Also, they have given jobs to the villagers like Karikkal in Karikkal quarry. But not a single person in our village is given a job in Mahimandalam quarry.

They were employed on a daily wage basis and not directly under TAMIN administration or at the quarry. There a situation like this. And we were lighting a lamp in that quarry just like how they light Karthikai Deepam on Tiruvannamalai hill. They broke the stones and took them away. So, we didn't put the lamp on.

**District Revenue Officer:**

It will be taken to the District Collector, knowledge and take action for execution of this project from the District Mineral Fund.

**Villagers of Mahimandalam**

In recent times people pass through this Lake bund road to catch the bus. And please visit the road. The students coming from school slipped and fell. So, if this road is repaired it will be better. Because it is an important path and near to go to Vellore. Also requested to please visit the road, it takes only 2 minutes.

**District Revenue Officer:**

It will be taken to the District Collector, knowledge and take action for execution of this project from the District Mineral Trust Fund. Also I will come after this meeting and definitely bring it to the attention of the District Collector.

**M. Kesavan, Melpodinantham village**

The Granite quarry is next to this Mahimandalam village and due to the ongoing work on the Chennai Bangalore National Highway causes pollution to our village. Since we have more livestock in our village, we require an 24 hours primary health centre and veterinary Hospital for our village. I humbly request you to fulfil these requests.

**Venkatesan (Former Panchayat President) - Mahimandalam village:**

This panchayat does not have any income .M/s. Tamil Nadu Mineral Limited has not properly paid their property Tax. The all-other Government agencies properly paid their property taxes. Also, the public told me why they did not refill the soil from the quarry to repair this lakeside road.

**District Revenue Officer**

I inform TAMIN administration to repair this lakeside road by dumping soil from the quarry.

**Venkatesan (Former Panchayat President) - Mahimandalam village:**

The officials said that Panchayat will get income only from the blue metal quarries and not from other minerals. Not for this panchayat alone and informed the situation is the same for all panchayats. The fact is that taking the income here, for example, the income from registration in every town goes to the Panchayat. The professional tax paid by the school teachers goes to the panchayat. The panchayat does not collect a single rupee of tax from this quarry, which gets highest revenue. Therefore, the panchayat president is affected. Couldn't answer people's questions.

The road is in damaged condition. Please visit and see the road condition. All other roads are equally good. Due to the heavy load here, more ups and downs in the road. Some people have fallen down when there is no light. Taking all this into your mind and implementing this project, our people have no objection. Please do whatever you can, to ensure that this income comes to our Panchayat. Unlike earlier times, nowadays every family has more graduates. The panchayat president could not answer their questions.

The Panchayat has no income from this project. Therefore, the panchayat could not pay the wages to their employees. Mahimandalam Panchayat has got such a rare project. On this basis I request you to take up this project and implement it and good things to Mahimandalam Panchayat.

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Vellore offered vote of thanks and informed that all the views and opinions offered by the people attended in this meeting will be recorded in the proceedings and will be submitted to Authority for necessary action.

The meeting comes to an end.

**District Environmental Engineer**
**Tamil Nadu Pollution Control Board**
**Vellore**

**District Revenue Officer,**
**Vellore District**

**வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், மகிமண்டலம் கிராமம், புல எண் 917(பகுதி) மற்றும் 921 (பகுதி), 166.92.0 ஹெக்டர் தி/ள் தமிழ்நாடு மினெரல்ஸ் லிமிடெட் நிறுவனத்தால் உத்தேசிக்கப்பட்டுள்ள கருப்பு கிரானைட் குவாரி சுரங்க திட்டம் தொடர்பாக 31.01.2024 அன்று காலை 11 மணியளவில் மகிமண்டலம் கிராமத்தில் அரசு துணை சுகாதார வளாகம் (பேருந்து நிறுத்தம் அருகில்) நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின் குறிப்புகள்:**

கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள்

1. திருமதி. D. மாலதி – மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள், வேலூர் மாவட்டம்

2. திரு. கு. இரவிச்சந்திரன் – மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், த.நா.மா.க.வா, வேலூர் மாவட்டம்

தொழிற்சாலை பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் வேலூர் மாவட்டம் – 64 எண்ணிக்கைகள் (வருகை பதிவேடு இணைக்கப்பட்டுள்ளது)

கருத்து கேட்பு கூட்டம் தொடர்பான அறிமுகம் – மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், வேலூர் மாவட்டம்:

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், த.நா.மா.க.வா, வேலூர் மாவட்டம் அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை தந்துள்ள மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள், அரசு அதிகாரிகள், தொழில் தொடங்க உள்ள கனிமவளத்துறை, காவல்துறை மற்றும் பொதுமக்கள் கருத்து தெரிவிக்க வந்திருக்கும் அனைவரையும் வரவேற்றார். மேலும் அவர் மத்திய சுற்றுச்சூழல் வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தால் வெளியிடப்பட்டுள்ள சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கைகள், 2006 மற்றும் பொதுமக்கள் கருத்து கேட்டு கூட்டம் பற்றி விளக்கினார்.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு சட்டம் 1986 இன் கீழ் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கையானது செப்டெம்பர் 14, 2006இல் வெளியிடப்பட்டுள்ளது. சுற்றுச்சூழல் தாக்க அறிவிப்பின் படி சுற்றுச்சூழல் முன் அனுமதி பெறவேண்டிய திட்டங்கள் மற்றும் தொழிற்சாலைகள் அட்டவணையில் இடம் பெற்றுள்ளது.

தி/ள் தமிழ்நாடு மினெரல்ஸ் லிமிடெட்,தமிழ்நாடு அரசு நிறுவனமானது மகிமண்டலம் கிராமம் சர்வே எண்:917(பகுதி), 921(பகுதி), காட்பாடி வட்டம் வேலூர் மாவட்டத்தில் கருங்கல் கிரானைட் கற்கள் 166.92 ஹெக்டர் அளவு வெட்டி எடுப்பதாக உத்தேசிக்கப்பட்டுள்ளது . சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தின் வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை தயார் செய்யப்பட்டு உள்ளது. அதன் ஒரு பகுதியாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடத்தப்பட வேண்டியது கட்டாயமாகும்.

இந்த பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் தொடர்பான பொது அறிவிப்பானது 24.12.2023–ல் தினத்தந்தி (தமிழ்) மற்றும் இந்தியன் எக்ஸ்பிரஸ் (ஆங்கிலம்) நாளிதழில் அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதனடிப்படையில் தற்போது இந்த கூட்டமானது மரியாதைக்குரிய மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் தலைமையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது எனத் தெரிவித்தார்.

மேலும், அவர் கூறுகையில், இந்த திட்டங்கள், செயல்பாடுகள், அதனால் ஏற்படும் பாதிப்பு, அந்த பாதிப்பை குறைப்பதற்கான நடவடிக்கைகள் எவ்வாறு எடுக்கப்படுகின்றன என்பது குறித்து தொழில்துறையினர் விரிவாக காணொலி காட்சி வாயிலாக எடுத்துரைப்பார்கள் அதன்பின் பொதுமக்கள் தங்கள் கருத்துக்கள், ஆலோசனைகள் மற்றும் கேள்விகளை கேட்டால் அதற்கு தொழில் நிர்வாகத்தினர் தகுந்த விளக்கங்களை அளிப்பார்கள். கேள்விகள் கேட்கும் முன் பொதுமக்கள் ஒவ்வொருவராக தங்கள் பெயர், ஊர், தகப்பனார் பெயரை குறிப்பிட்டு கருத்துக்களை தெளிவாக தெரியப்படுத்த வேண்டும் எனத் தெரிவித்தார். மேலும் இங்கு நடைபெறும் அனைத்து நிகழ்வுகளும் வீடியோவாக பதிவு செய்யப்பட்டு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு (SEIAA) அவர்களின் பரிந்துரைக்காக அனுப்பி வைக்கப்படும் எனத் தெரிவித்தார்.

அதன்பின் அவர், மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களை இந்த திட்டத்திற்கான பொது மக்கள் கருத்துக்கேட்புரை கூட்டத்தை தலைமை தாங்கி நடத்துமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன் எனத் தெரிவித்தார்.

<u>மாவட்ட வருவாய் அலுவலர், வேலூர்:</u>

வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், மகிமண்டலம் கிராமம், சர்வே எண் 917(ப) மற்றும் 921 (ப), தி/ள் தமிழ்நாடு கனிம நிறுவனத்தால் அரசு புறம்போக்கு நிலத்தில் புல எண் 917 (ப) மற்றும் 921(ப) 166.92 ஹெக்டர் குவாரி பணியை மேற்கொள்ள இருக்கிறார்கள்.ஆகையால் சுற்றுச்சூழல் முன் அனுமதி பெறுவதற்காக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடத்தபட வேண்டும்.இது சம்மந்தமாக, ஏற்கனவே உங்களுக்கு ஒலி பெருக்கி மற்றும் செய்தி தாள்கள் மூலமாக விளம்பரம் செய்யப்பட்டுள்ளது.ஆகையால் இந்த திட்டம் சம்மந்தமான கருத்துகளை தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.மேலும் இத்திட்டம் பற்றிய செயல்பாட்டினை தமிழ்நாடு கனிம நிறுவன பிரதிநிதி எடுத்துரைப்பார்கள்.

<u>தொழில்துறையினர் திரு.Dr. E. கணேசன், (துணை மேலாளர்):</u>

இதை தொடர்ந்து, தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் பிரதிநிதி, திரு. E. கணேசன் அவர்கள், தி/ள்.தமிழ்நாடு கனிம நிறுவனத்தால் வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், மகிமண்டலம் கிராமம், சர்வே எண் 917 (ப) மற்றும் 921 (ப), தி/ள்.தமிழ்நாடு கனிம நிறுவனத்தால் நடத்தபடவுள்ள கருப்பு கல் குவாரி பற்றிய செயல் விளக்கத்தை பற்றி (Power Point Presentation) மூலம் விரிவாக எடுத்துரைத்தார்கள்.

மேலும் ஏற்கனவே 1991 ஆம் ஆண்டிலிருந்து மகிமண்டலம் கிராமத்தில் கருப்பு கல் குவாரி திட்டம் செயல்பாட்டில் இருப்பதாக தெரிவித்தார், இத்திட்ட செயல்பாட்டின் மதிப்பு, சுரங்க தளத்தின் சுற்றுச்சூழல் விபரங்கள், இத்திட்டத்தினால் எதிர்நோக்கும் தாக்கங்கள் மற்றும் அதன் தடுப்பு நடவடிக்கைகள் பற்றியும் எடுத்துரைத்தார்.

மேலும் இத்திட்ட செயல்பாடு செலவினங்கள் குறித்தும், குவாரியில் செயல்படுத்தப்பட்ட பழைய முறை மற்றும் தற்போது செயல்படுத்தும் புதிய முறை கிரானைட் கற்களை வெட்டி எடுப்பது குறித்தும் விளக்கமாக தெரிவித்தார். இறுதியாக பொது மக்களிடம் தங்களுடைய ஐயப்பாடுகள் கேள்விகள் கருத்துக்களை கேட்கலாம் அதற்கு பதில் அளிக்க தயாராக இருப்பதாக தெரிவித்தார். மேலும் இத்திட்ட செயல்பாடு செலவினங்கள் குறித்தும்,

குவாரியில் செயல்படுத்தப்பட்ட பழைய முறை மற்றும் தற்போது செயல்படுத்தும் புதிய முறை கிரானைட் கற்களை வெட்டி எடுப்பது குறித்தும் விளக்கமாக தெரிவித்தார். பின்பு இத்திட்டத்தின் பயனாக அரசிற்கு அன்னிய செலாவணி ஈட்டித் தருகிறது என்பதை தெரிவித்தார். இறுதியாக பொது மக்களிடம் தங்களுடைய ஐயப்பாடுகள் கேள்விகள் கருத்துக்களை கேட்கலாம் அதற்கு பதில் அளிக்க தயாராக இருப்பதாக தெரிவித்தார்.

<u>மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் வேலூர் மாவட்டம் :</u>

இப்பொழுது பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்கள், யோசனைகள், விளக்கங்கள் மற்றும் வினாக்களை ஒருவர் பின் ஒருவாராக தெரிவிக்கலாம்.ஒருவர் கேட்டு அதற்குரிய பதிலை தொழிற்சாலை நிர்வாகத்தினர் விளக்கம் அளித்த பிறகு அடுத்த நபர் வினாக்களை கேட்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

<u>லோகநாதன், மகிமண்டலம் கிராமம் :</u>

மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களுக்கும் மற்றும் சுகாதார துறை அவர்களுக்கும் என்னுடைய வணக்கங்களை தெரிவித்துக்கொள்கிறேன்.மற்றும் இந்த கிரானைட் பற்றி நவீன விளக்கங்களை எல்லாம் கொடுத்திருக்கிறார்கள்.இதற்கு முன் எங்களுடைய கிணறுகள் அதிர்ச்சியால் சரிந்து கிடக்கின்றன.இப்போது நவீனமான முறையில் திட்டம் செயல்படுத்தப்படுவதால் அதற்கு நான் ஒன்றும் சொல்வதற்கில்லை என கூறினார்.மீண்டும் மாசு ஏற்படும் அளவுக்கு இருக்கிறது.இந்த சாலை அமைப்பதில் ஏராளமான மாசு மக்களுக்கு கெடுதல் உண்டாக்குகிறது.அதற்காக இங்கே ஒரு சுகாதார நிலையமும் மற்றும் கால் நடை மருத்துவமனையும் அமைத்து தரும்படி மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதுவும் தவிர இந்த கிரானைட் உடைத்து எடுப்பதற்காக இங்கேயே இந்த மக்கள் பயன்பெறும் வகையில் அதற்கு வேண்டிய இயந்திரங்களும் மற்றும் இளைஞர்கள் அனைவருக்கும் வேலை செய்வதற்கு ஏற்பாடு செய்து தரும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

மேலும் எங்கள் ஊரில் நாய்களும் மற்றும் குரங்குகளும் ஏராளமாக இருக்கிறது.அதனால் அது இடும் கழிவுகள் சொல்லி மாளாது. மேலும் நாய் மற்றும் குரங்கு இடும் எச்சைகள் எல்லாம் மாசு கட்டுப்பாட்டில் தான் வரும். இதை சீரிய முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

<u>மாவட்ட வருவாய் அலுவலர் பதில் :</u>

இது சம்மந்தமாக தனியாக கடிதம் கொடுங்கள் அதுபற்றி வனத்துறையின் கவனத்திற்கு கொண்டு சென்று நடவடிக்கை எடுக்கலாம். மேலும், அக்கிராம மக்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கும்படி தமிழ் நாடு கனிம வளத்துறைக்கு அறிவுறுத்தினார்.

<u>எம்.கேசவன், மேல்போடிநத்தம் கிராமம்:</u>

சர்வே எண் 917 குவாரி பக்கத்தில் போடிநத்தம் மற்றும் மேல்போடிநத்தம் என்ற இரண்டு கிராமங்கள் உள்ளன.ஆரம்பத்தில் ஐயா, சொன்னது போல் வீடுகள் எல்லாம் வெடிவைப்பதனால் விரிசல் ஏற்பட்டு இடிந்து விழும் நிலையில் உள்ளது.தற்போது விஞ்ஞான முன்னேற்றத்தினால் நவீன தொழில்நுட்ப முறையில் திட்டத்தை செயல்படுத்துகிறார்கள்.அதை நான் குறை சொல்லவில்லை. இருந்தாலும் இவர்கள் அதிக எடை வேண்டும் என்பதற்காக லாரியில் ஏகப்பட்ட கற்கள் ஏற்றிவிடுகிறார்கள். இப்போது கல்குவாரி ரோடுலிருந்து பொன்னை ரோடு வரைக்கும் தார் ரோடு நசிங்கி இருக்கிறது.

அதற்காக ஒரு அளவாக ஏற்றி செல்வதில்லை.அந்த அளவுக்கு எடை அதிகமாக ஏற்றி கொண்டு போய் அந்த ரோடு மாசு படுகிறது. இரண்டாவது இவங்க வெட்டிவிட்ட பகுயில் இருந்து மண்அரிப்பு ஏற்பட்டு பக்கத்தில் உள்ள ஏரி பாதி நிரம்பிவிட்டது.இந்த மண்அரிப்பினால் பக்கத்தில் உள்ள எங்கள் நிலம் வெள்ளத்தில் அடிக்கப்பட்டது. அங்கு ஒரு கசிவு நீர் (Check Dam) கட்டிதருவோம் என்று திரு. கண்ணதாசன், முன்னாள் கோட்ட மேலாளர் அவர்கள் திட்ட வரைவு எல்லாம் போட்டார்கள்.என்ன காரணத்தினாலோ கிடப்பில் போட்டு விட்டார்கள் கடைசிவரைக்கும் கசிவு நீர் (Check Dam) கட்டவில்லை.

மேலும் எங்கள் கிராமத்துகாரர்கள் மிலிட்டரிக்கு வேலைக்கு செல்கிறார்கள்.அப்போது வேலையில்லாததால் 100 மற்றும் 200 இளைஞர்கள் வேலை கேட்டு சென்னை, தலைமை அலுவலகத்திற்கு சென்று மேலாண் இயக்குநர் அவர்களிடம் வேலை கேட்டோம்.அவர்கள் இன்றைக்கு நாளைக்கு என்று சொன்னார்களே தவிர வேலை கொடுக்கவில்லை.மேலும் கரிக்கல் மற்றும் குவாரி நடக்கும் கிராமத்துகாரர்களுக்கு வேலை கொடுத்திருக்கிறார்கள். ஆனால் எங்கள் கிராமத்தில் ஒரு நபருக்கு கூட வேலை கொடுக்கபடவில்லை. தினக்கூலி அடிப்படையில் வேலை கொடுத்தார்களே தவிர நேரிடையாக டாமின் நிர்வாகத்திலோ அல்லது குவாரியிலோ வேலை தரவில்லை. இந்தமாதிரி ஒரு பிழை இருக்கிறது. மேலும் திருவண்ணாமலை மலை மீது கார்த்திகை தீபம் எப்படி ஏற்றுவார்களோ அந்த மாதிரி அந்த குவாரியில் நாங்கள் விளக்கு ஏற்றி கொண்டு இருந்தோம்.அந்த கற்களை உடைத்து எடுத்துவிட்டார்கள்.அதனால் நாங்கள் விளக்கு வைக்கவில்லை.

<u>மகிமண்டலம் கிராம பொதுமக்கள்:</u>

சமீபகாலத்தில் மக்கள் பேருந்தில் செல்வதற்கு இந்த ஏறிகரை வழியாக செல்கிறார்கள்.இப்போதைக்கு அந்த ஏரிக்கரைக்கு ஒருமுறை வந்து பாருங்கள் பள்ளியிலிருந்து வரும் மாணவர்கள் தவறி விழந்தார்கள்.அதனால் இந்த ரோடு சரிசெய்தால் பரவாயில்லை.ஏன் என்றால் இது முக்கியமான பாதை.வேலூருக்கு போவதற்கு பக்கமாக உள்ளது. இந்த ஏரிகரை வழியை 2 நிமிடம் பார்த்து செல்லவும் எனத் தெரிவித்தார்.

<u>மாவட்ட வருவாய் அலுவலர் பதில் :</u>

இந்த திட்டம் மாவட்ட கனிமவள நிதியிலிருந்து (District Mineral Fund) நிறைவேற்ற வேண்டி மாவட்ட ஆட்சியர் கவனத்திற்கு கொண்டு சென்று நடவடிக்கை எடுக்கலாம் மற்றும் இந்த கூட்டம் முடிந்தவுடன் வந்து பார்க்கிறேன் மற்றும் கண்டிப்பாக மாவட்ட ஆட்சியரின் கவனத்திற்கு கொண்டு செல்கிறேன் எனத் தெரிவித்தார்.

<u>எம். கேசவன், மேல்போடிநத்தம் கிராமம்:</u>

இந்த மகிமண்டலம் கிராமத்தின் பக்கத்தில் கல் குவாரி இருப்பதனாலும், மற்றும் சென்னை பெங்களூர் தேசிய நெடுஞ்சாலை வேலை நடப்பதினால் மாசு வருகிறது. மேலும் ஆடுகள் மாடுகள் அதிகமாக வளர்க்கிறார்கள் ஆகையால் இந்த 24 மணி நேரமும் இயங்க கூடிய ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் கால்நடை மருத்துவமனை வேண்டி கேட்டுக்கொள்கிறோம். இந்த கோரிக்கைகளை நிறைவேற்றி தருமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன் எனத் தெரிவித்தார்.

<u>வெங்கடேசன் (முன்னாள் ஊராட்சி மன்றதலைவர்) – மகிமண்டலம் கிராமம்:</u>

இந்த ஊராட்சிக்கு எந்த ஒரு வருமானமும் கிடையாது. இங்குள்ள ஊராட்சி மன்றத்திற்கு முறையாக தொழில் வரி தமிழ்நாடு கனிம நிறுவனத்தால் வழங்கப்படவில்லை.

மேலும் மற்ற அனைத்து அரசு சார்ந்த நிறுவனத்திடமிருந்து தொழில் வரி ஊராட்சி மன்றத்திற்கு கிடைக்கிறது. மேலும், இந்த ஏரிகரை ரோட்டுக்கு குவாரியிலிருந்து ஏன் மண் கொட்டி சரி செய்யவில்லை என்று பொதுமக்கள் என்னிடம் தெரிவித்தார்கள் எனத் தெரிவித்தார்.

<u>மாவட்ட வருவாய் அலுவலர் – பதில் :</u>

தி/ள்.தமிழ்நாடு கனிம நிர்வாகம் டாமின் இந்த ஏரிக்கரை ரோட்டுக்கு குவாரியிலிருந்து மண்ணை கொட்டி சரிசெய்து கொடுக்குமாறு தெரிவித்தார்.

<u>வெங்கடேசன் (முன்னாள் ஊராட்சி மன்றதலைவர்) – மகிமண்டலம் கிராமம்:</u>

வெள்ள கல் உடைத்தால் மட்டுமே பஞ்சாயத்திற்கு வருமானம் வரும். மற்ற கனிமம் மூலம் வருமானம் வராது என்பது போல் விளக்கம் சொல்லி அதிகாரிகள் அனுப்பிவிட்டார்கள். உங்களுக்கு மட்டும் இல்லை.எல்லா பஞ்சாயத்துகளுக்கும் இதே நிலைமைதான் என்று சொன்னார்கள்.உண்மை என்னவென்றால் இங்கே வருமானத்தை எடுத்து உதாரணமாக ஒவ்வொரு ஊரிலும் பத்திர பதிவின் மூலம் வரும் வருமானம் பஞ்சாயத்துக்கு வருகிறது.பள்ளி ஆசிரியர்கள் செலுத்துகின்ற தொழில்வரி பஞ்சாயத்துக்கு வருகின்றது.அதிகபட்ச வருமானம் வருகின்ற இந்த குவாரியிலிருந்து பஞ்சாயத்துக்கு ஒரு ரூபாய் வரி கூடி இல்லை.ஆகையால் பஞ்சாயத்து தலைவர் பாதிக்கப்படுகிறார்.மக்கள் கேட்கும் கேள்விக்கு பதில் சொல்ல முடிய்வில்லை.ரோடு எல்லாம் மேடு பள்ளமாக இருக்கிறது எனத் தெரிவித்தார்.

நீங்கள் வேண்டும் என்றால் பார்வையிடுங்கள், மற்ற ரோடு எல்லாம் சமமாக நல்லமுறையில் உள்ளது.இங்கு லோடு அதிகமாக செல்வதால் மேடு பள்ளம் அதிகமாக உள்ளது.வெளிச்சம் இல்லாத சமயத்தில் சில பேர்கள் கீழே விழுந்துள்ளார்கள். இதை எல்லாம் உங்கள் மனதில் எடுத்துக் கொண்டு இந்த திட்டத்தை நீங்கள் எடுத்து செயல்படுத்துவதால் எங்கள் மக்களுக்கு எந்த ஆட்சேபனையும் கிடையாது ஆனால் இந்த வருமானம் எங்கள் பஞ்சாயத்துக்கு வருவதற்கு என்ன வழி செய்ய முடியுமோ அதை அதிகபட்சமாக செய்து கொடுங்கள்.

முந்தைய காலம் போல் இல்லாமல் தற்போதைய காலத்தில் ஒவ்வொரு குடும்பத்திலும் பட்ட படிப்பு படித்தவர்கள் அதிகம் உள்ளார்கள்.அவர்கள் கேட்கும் கேள்விக்கு ஊராட்சி மன்ற தலைவரால் பதில் சொல்ல முடியவில்லை.இந்த திட்டத்தின் மூலம் பஞ்சாயத்துக்கு எந்த வருமானமும் இல்லை.ஆதலால் பஞ்சாயத்து ஊழியர்களுக்கு ஊதியம் வழங்க இயலவில்லை.இப்படிப்பட்ட அரிய திட்டம் மகிமண்டலம் பஞ்சாயத்திற்கு கிடைத்துள்ளது.இந்த அடிப்படையில் இந்த திட்டத்தை எடுத்து செயல்படுத்தி மகிமண்டல பஞ்சாயத்துக்கு ஒரு நல்ல வழி காண்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன் எனத் தெரிவித்தார்.

அதன்பின் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், த.நா.மா.க.வா, வேலூர் மாவட்டம் அவர்களின் நன்றியுரை அளித்ததுடன் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டமானது நிறைவுக்கு வந்தது.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
த.நா.மா.க.வா, வேலூர் மாவட்டம்

மாவட்ட வருவாய் அலுவலர்,
வேலூர் மாவட்டம்